# நாம் பிறர்மேல் அன்பு செலுத்துவதாலேயே அவர்களுக்கு சேவை செய்கிறோம்.

## செம்மறிகளுக்கும் வெள்ளாடுகளுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்க.

**ஜெபம்:** "பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, பிறருக்கு அன்போடு சேவை செய்ய சிறுவர்களுக்கு ஊக்கமளிக்க இந்தப் பாடத்தை பயன்படுத்துவீராக."

பின்வரும் சிறுவர்க்குரிய கல்வி நடவடிக்கைகளில் எதைவேண்டுமானாலும் தெரிந்து கொள்க.

மத்தேயு 25:31-46 ல் உள்ள செம்மறி வெள்ளாடு பற்றிய கதையை ஒரு பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர் வாசிக்கவும். தேவன் தமக்குரிய மக்களை எவ்வாறு தீர்மானிக்கிறார் என்பதை இது கூறுகிறது. கதையைக் கூறிய பின் பின்வரும் கேள்விகளைக் கேட்கவும்.

- யார் மக்களை நியாயம்தீர்த்து செம்மறி வெள்ளாடுகளாக பிரிப்பார்? (31-32)
- (35)
- 'செம்மறி' தேவன் மேல் உள்ள தன் அன்பை வெளிப்படுத்த என்ன செய்கிறது? (42)
- தேவையில் உள்ள மக்களை 'வெள்ளாடு' எவ்வாறு நடத்துகிறது, (40)
- மற்றவர்கள் மேல் அன்பு செலுத்தாதவர்களுக்கு நியாயத்தீர்ப்பில் என்ன நடக்கும்? (46)

மத்தேயு 25:31-46 லிருந்து செம்மறி மற்றும் வெள்ளாடுகளின் கதையின் பகுதிகளை நாடகம் ஆக்குக.

பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் இயேசு மற்றும் கதை கூறுபவரின் பாத்திரங்களை ஏற்கலாம். கதைகூறுபவர், கதைச்சுருக்கம் கூறி, பிள்ளைகள் பேச/நடிக்க வேண்டியவற்றை ஞாபகப்படுத்துபவர்.

சிறு பிள்ளைகள், செம்மறி, வெள்ளாடு, தேவையில் இருக்கும் மக்கள் ஆகிய வேடத்தை ஏற்கலாம்.

### நாடகம், முதல் பகுதி, மத்தேயு 25:31-40

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியைக் கூறவும் (31-40) பின் "மக்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**மக்கள்** : "எனக்கு உதவி செய்யுங்கள்" "நான் பசியாய் இருக்கிறேன்" "எனக்குத் துணி வேண்டும்" "எனக்குத் தாகமாய் இருக்கிறது" 'எனக்குத் தூங்க ஒர் இடம் வேண்டும்" ! "எனக்கு சுகமில்லை".

**கதைகூறுபவர்:** "செம்மறி ஆடு கூறுவதைக் கேளுங்கள்"

**செம்மறி** : "வாங்க"! நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம். ஏனெனில் நாங்கள் இயேசுவை நேசிக்கிறோம்!"

**இயேசு** : "நான் இப்போது இந்த செம்மறிகளை வெள்ளாடுகளில் இருந்து பிரித்து விடுவேன். செம்மறிகளே, என்னோடு வாருங்கள். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஏனெனில் நீங்கள் என்னை போஷித்து, ஆடைகள் கொடுத்து உதவி செய்தீர்கள்."

**செம்மறி** : "நாங்கள் இதை எப்போது செய்தோம்? நாங்கள் உம்மை தேவை உள்ளவராக ஒருபோதும் கண்டதில்லையே?"

**இயேசு** : "ஏழைகளான இவர்களில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்!"

### நாடகம், இரண்டாம் பகுதி, மத்தேயு 25:41-46

**கதை கூறுபவர்:** கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். (41-46). பின், "மக்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**மக்கள்:** "தயவு செய்து உதவுங்கள்" "நான் பசியாய் இருக்கிறேன்" "எனக்கு துணி தேவை" "நான் தாகமாய் இருக்கிறேன்" "எனக்கு தூங்குவதற்கு இடம் தேவை" "நான் வியாதியாய் இருக்கிறேன்"

**வெள்ளாடுகள்:** "போங்க! நான் உங்களுக்கு உதவ மாட்டேன்!"

**இயேசு:** "வெள்ளாடுகளே, என்னை விட்டு அகன்று போங்கள்! நான் தேவை உள்ளவனாக இருக்கும் போது எனக்கு நீங்கள் உதவவில்லை!"

**வெள்ளாடுகள்:** "உம்மைத் தேவை உள்ளவராக எப்போது பார்த்தேன்?"

**இயேசு:** "தேவையில் இருக்கும் ஒருவரை நீங்கள் புறக்கணிக்கும் போது, என்னைப் புறக்கணித்தீர்கள்."

**கதை கூறுபவர்:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறவும்.

சபைத்தலைவரோடு பேசி சிறுவர்களுக்காக ஏற்பாடு செய்ய வேண்டியவை:

- பெரியவர்களுக்காக ஆராதனை வேளையில் இந்த நாடகத்தை நடத்தவும்.
- இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் உள்ள கேள்விகளை சிறுவர்கள் பெரியவர்களிடம் கேட்கவும்.
- பிள்ளைகள் தயாரித்த கவிதை உட்பட எல்லாவற்றையும் வழங்குக.

தேவையில் உள்ளவர்களுக்கு உதவுவதன் மூலம் தேவனுக்கு எந்த வகைகளில் உதவி செய்யலாம் என்று குழந்தைகளிடம் கேட்கவும்.



ஒரு உணவு வைக்கும் பாத்திரத்தை வரையவும். ஆராதனை வேளையின் போது பெரியவர்களிடம் படத்தைக் காட்டவும். ஒருவருக்கொருவர் சேவை செய்வதின் மூலம் நாம் தேவனுக்கு சேவை செய்கிறோம் என்று விளக்கம் அளிக்கவும்.

**மனன வசனம்:** 1 யோவான் 4:19-20.

**சங்கீதம்:** மூன்று சிறுவர்கள் 1 கொரி. 13:1, 4-5, 6-8 வசனங்களை ஒப்புவிக்கட்டும்.

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கு இராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்பாய் இராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு நினையாது.

அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது.

மக்கள் எவ்வாறு அன்போடு தேவை உள்ளவர்களுக்கு உதவுகிறார்கள் என்பதைக் காட்டும் பார்த்த உதாரணங்களையோ, பாடலையோ, கவிதையையோ, சிறுகதையையோ பெரிய பிள்ளைகள் எழுதலாம். இதை அவர்கள் வீட்டிலேயோ, அல்லது வாரநாட்களில் சிறு குழுக்களிலேயோ செய்யட்டும்.

**ஜெபம்:** "கர்த்தாவே, உண்மையான அன்பு எது என்பதை எங்களுக்குக் காட்டியதற்காய் நன்றி. நீர் எங்களை நேசிப்பது போல நாங்களும் ஒருவரில் ஒருவர் அன்பு கூர உதவி செய்யும். உதவி தேவைப்படுவோருக்கு சேவை செய்வதன் மூலம் நாங்கள் உம் மேல் உள்ள எங்கள் அன்பைக் காட்ட விரும்புகிறோம். பிறருக்கு உதவி செய்யும் போது உமக்கு நாங்கள் எங்கள் அன்பைக் காட்டுகிறோம் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள எங்களுக்கு உதவும்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net